கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் கேள்வி!

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

(Monitor this government!) ஒரு அரசாங்கம் நமக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம். நீங்கள் திமுகாவா, தவெகாவா அரசியல்வாதிங்க, நாங்க பாத்துக்கிறோம். அதை நாங்க பேசிக்கிறோம். பட் ஜ அப்பீல் டூ தி யங்ஸ்டர்ஸ் ஆப் தமிழ் நாடு (But I appeal to the youngsters of Tamil Nadu): கைண்ட்லி ஜட்ஜ் திஸ் கவர்மெண்ட்! மார்க் போடுங்க, நீங்கள் வந்து இதை வந்து இன்னைக்கு முதல் கொண்டுமாவது ஆட்சிக்கு மாற்றத்திற்கு வந்திருக்கக் கூடிய இந்த ஆட்சியாளர்கள் உண்மையிலேயே மாற்றத்தை கொடுத்திருக்காங்களா? இளைஞர்களை நோக்கி, முன்னேற்றத்தை நோக்கி போயிருக்குதா? இண்டஸ்ட்ரீஸ் கொண்டு வராங்களா? எம்ப்ளாய்மெண்ட் ஆப்பர்சுனிட்டி (Employment opportunity) அதிகமா உருவாக்குறாங்களா?

இது எல்லாத்தையும் இளைஞர்கள் கண்டிப்பா நீங்கள் வந்து சீர் தூக்கி பார்க்கணும். படித்தவர்கள், வெறும் பாமரர்கள் மக்கள் கூட வந்து இன்னைக்கு அரசியலை நல்லா புரிஞ்சிட்டு ஓட்டு போடுறாங்க. கிரவுண்ட்ல போய் நான் பார்த்தேன், இது எதுவுமே செய்யலன்னு சொல்றாங்க. ஆனா எங்ஸ்டர்ஸ் (Youngsters), நல்ல அறிவாளிகள், சிந்தனையாளர்கள், பகுத்தறிவு கொண்ட இளைஞர்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இளைஞர்கள்... யு ஹேவ் டு ஜட்ஜ் தெம்! (You have to judge them!) முதலமைச்சர் ஆஃப் தமிழ்நாடு! தமிழ்நாடு முதலமைச்சர் இளைஞர்களை வஞ்சிக்கிறார், துரோகம் செய்கிறார், ஏமாற்றுகிறார். தயவுசெய்து நீங்கள் புரிஞ்சுக்கணும்.

நீங்கள் எல்லோரும் வந்து நாங்க கேட்கிற கேள்வி எல்லாம் திமுகவினுடைய கேள்வியா தயவு செய்து பார்க்காதீங்க. ஊடகங்கள் கேள்வி எழுப்பணும். நீங்கள் இந்த சென்ட்ரல் கவர்மெண்ட் (Central Government) வெளியிட்டு இருக்கக் கூடிய இந்த செய்தியை நீங்கள் வெளியிடணும். இதைப் பற்றி தலையங்கங்கள் எழுதணும். இதைப் பற்றி ஊடகங்கள் விவாதிக்கணும். வெட்கமே இல்லாம பேசுனீங்களே! பல ஊடகங்கள் விவாதங்கள்ல உட்கார்ந்துட்டு இருக்கலாம். நான் ஊடகங்களை மட்டும் சொல்லல, ஊடகங்கள்ல உட்கார்ந்து இருந்தவங்க எல்லாம் சொன்னாங்களே? இந்த காசு உடனே திமுகாவுக்கு வந்திருக்குமா? இந்த காசு திமுகாவினுடைய அரசியல் கட்சிக்கு பயன்படுத்தி இருக்குமா? இந்த காசை வச்சு தி.மு.க. வந்து தேர்தலை பார்த்திருக்குமால்லாம் கேட்டீங்களே?

மக்கள் புரிஞ்சுகனும்!

இந்த மாதிரி கேவலமா கேட்கறதுக்கு அல்லது தரம் தாழ்ந்து கேட்கறதுக்கு நான் விரும்பல. ஆனால், இந்த கேள்வி ஏன் உங்களை நோக்கி இருக்கக்கூடாது அப்படிங்கறதுதான் எங்களுடைய எண்ணமும் கூட. அதனால, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே, தயவுசெய்து அரசியலா இதை பார்த்துட்டு கடந்து போகாதீங்க. உங்க கண்ணு முன்னாடி உங்க மகனும் உங்க மகளும் எப்படி இருக்காங்களோ, அது போலதான் இளைஞர்களும் கூட, தமிழ்நாட்டு மக்களும் கூட. இந்த இளைஞர்கள் எல்லாம் உங்களுக்கு ஓட்டு போட்டுருக்காங்க சார், ப்ளீஸ் ஏமாத்தாதீங்க! வந்து பதில் சொல்லுங்க, தமிழ்நாட்டினுடைய காவல் துறை வந்து இளைஞர்களுக்காக வந்து பதில் சொல்லுங்க, தமிழ் நாட்டு மக்களுக்காக வந்து பதில் சொல்லுங்க!

நான் கேட்கிறேன், காவல்துறைக்கு வெட்கம் இல்லையா? இன்டலிஜென்ஸ் (Intelligence) இருக்கா? தூங்கிட்டு இருக்கீங்களா? சென்டர்ல (Center) இருந்து வந்து ஒருத்தவங்க பிடிக்கிறாங்க. என்ன சார் பண்றீங்க? என்ன பண்றது? உங்க காவல்துறை யாருக்கு நீங்கள் காவல் வேலை பார்த்துட்டு இருக்கீங்க? இது காவல்துறையா இல்ல ஏவல் துறையா? சென்ட்ரல் கவர்மெண்ட் வந்து பிடிக்குது சார்! காவல் துறைக்கு வெட்கமா இல்ல? எல்லாமே நீங்கள் எல்லாம் வந்து காக்கி உடம்பு போட்டுக்கிட்டு, நீங்கள் எல்லாம் வந்து மிடுக்கா வந்து சம்பளம் வாங்கிட்டு வேலை செய்றீங்களே, இது பத்தி ஏதாவது வாய் திறக்க முடியுதா உங்களால? இத நான் ரொம்ப அதிகமாதான் கேட்கிறேன், பிகாஸ் இந்த மிடில் கொண்டுமாவது உங்களுக்கு வரணும். அரசாங்கத்து கிட்ட சம்பளம் வாங்குறீங்க, மக்கள் கிட்ட சம்பளம் வாங்குறவங்களுக்கு வரணும், எது வரணுமோ அது வரணும். வந்து மக்கள் முன்னாடி வந்து பேசுங்க சார், நீங்கள் எல்லாம் வந்து செய்தியாளர்கள் மிரட்டப்படுகிறார்கள்...

இல்ல, செய்தியாளர்கள் மிரட்டப்படுறது மட்டும் இல்ல, செய்தி நிறுவனங்களும் மிரட்டப்படுது. இவங்களுக்கு சென்ட்ரல் கவர்மெண்ட் சப்போர்ட் (Support) இருக்கு சார்! மாநில அரசுக்கு சென்ட்ரல் கவர்மெண்ட் சப்போர்ட் இருக்கு. இன்ஃபர்மேஷன் பியூரோ (Information Bureau), இன்ஃபர்மேஷன் அண்ட் பிராட்காஸ்டிங் டிபார்ட்மெண்ட் மினிஸ்ட்ரி (Information & Broadcasting Department Ministry) இஸ் கம்ஸ் அண்டர் தி சென்ட்ரல் கவர்மெண்ட் (is comes under the Central Government). உங்களுடைய சேனல்களுடைய லைசென்ஸை (License) புடுங்கிடுவேன், பாத்துக்கோங்க. இதெல்லாம் மிரட்டுறது யாரு? ஆதவ் அர்ஜுனா. எங்களுக்கு வருது தகவல், உடனே சேனலுக்கு போயிடுறாங்க, உடனே "ஏன் சார் இப்படி நியூஸ் போடுறீங்க?" அப்படிங்கிறாங்க.

நான் என்ன கேட்கிறேன்? தி.மு.க. மேல நீங்கள் பண்ணீங்களா? அப்ப என்ன உங்களுக்கு தைரியம் வந்தது? அப்ப வந்து ஜனநாயகத்தில வந்து நாலாவது தூணா இருக்கக்கூடிய ஜனநாயகத்தை காப்பாத்தணும்ன்ற ஒரு எண்ணம், வேட்கை, உத்வேகம் அப்படியே பொங்கி வந்தது இல்ல பிரஸ்ஸுக்கு எல்லாம்? அது எங்க சார் போச்சு? இப்ப உங்களுக்கெல்லாம் மிரட்டுனா பயந்துடலாமா? நீங்கள், உங்கள் மேல் கை வைக்க முடியுமா இல்ல விட்டுவோமா நாங்கள்? தி.மு.க. பல நேரங்கள்ல மீடியாக்கள் வந்து சப்போர்ட்டா இல்லாம இருக்கும். ஆனால் தி.மு.க. என்றைக்கும் வந்து ஜனநாயகத்தை காப்பாத்துவதற்கு மீடியா பக்கம் நின்றது. நல்லதுக்கு, எங்களை எதிர்த்து அல்ல... எங்களை வந்து சிதைச்சு எழுதுற பத்திரிகை கூட பிரச்சினைனா போய் நின்றதுதான் நாங்கள் எல்லாம்.

அதுக்காக வந்து தி.மு.க.வோட கை கோர்த்துது பிரஸ்ஸ் (Press), திமுகவோட கை கோர்த்துதுன்னா அதெல்லாம் கொச்சைப்படுத்த விரும்பல. ஜனநாயகத்தில் யாருக்கு என்ன கஷ்டம் வந்தாலும் நிக்கக் கூடிய இடம் திமுகதான். அது எல்லாருக்கும் தெரிஞ்ச விஷயம்தான். ஆனால், ஒருவேளை ஊடகங்கள்... உங்கள் மூலமா நான் கேட்கிறேன், செய்தியாளர் கேட்ட கேள்விக்காக நான் பதில் சொல்றேன். ஊடகங்கள் மிரட்டப்படுவதேயானால், ஒரு நல்ல செய்தியை, உண்மையான செய்தியை வெளிக்கொண்டு வருவதற்கு ஊடகங்கள் மிரட்டப்படுவதேயானால், உங்கள் பின்னால் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கின்ற மகத்தான தலைவர் இருக்கிறார்ன்னு பயப்படாதீங்க, தைரியமா இருங்க!

நான் ஒன்பது பேர் பட்டியல் படிச்சதுக்கு காரணம் என்னன்னா, இவங்க எல்லாமே tvk நிர்வாகியா இருக்காங்க. நான் கேட்கிறேன், கடந்த அஞ்சு வருஷத்துல தி.மு.க. வினுடைய நிர்வாகிகள் இது போன்று இருந்தாங்கன்னு சொல்லி எதனா இருக்கா? அவங்களை காப்பாத்தி இருக்கிறோமா? இல்ல அவங்களுக்காக வந்து... சார், ஸ்டேஷன் பெயில்ல விட்டுருக்காங்க நான் சொல்றேன் உங்களுக்கு ஈரோட்ல இருக்கிறவரை. ஸ்டேஷன் பெயில்ல விடுறாங்க ஃபோர் இயர்ஸ் (4 Years) ஏற்கனவே கன்விக்ட் (Convict) ஆன ஒருத்தர, த.வெ.க. நிர்வாகியை! இது போன்ற விஷயங்களுக்கு தி.மு.க. எப்போதும் துணை போகாது சார். சும்மா இவங்க வந்து நரேட்டிவ் செட் பண்ணி பண்ணாங்களே தவிர, ஃபெயிலியர் (Failure) ஆயிடுச்சே.

நான் கேட்கிறேன், அப்ப தி.மு.க. கூட புகைப்படம் எடுத்த அந்த நபர், அவர் வீட்ல சீஸ் (Seize) பண்ணாங்களா? அவர் வந்து டிரான்சாக்ஷன் (Transaction) இருக்குதுன்னு சொல்லிதான் கைது பண்ணாங்களே தவிர, சீசர் (Seizure) கிடையாது. இவ்வளவு பெரிய சீசர் இந்த கவர் மெண்ட்லதான்! இப்ப டிவிகே (TVK) நிர்வாகி வீட்டிலிருந்து சீஸ் பண்ணி இருக்காங்க. அதெல்லாம் எப்போதும் போல மடைமாற்று அரசியலுக்காக பேசக்கூடியது சார். அதனால தான் சொல்றேன், இதில் நான் அரசியல் போக விரும்பல. தி.மு.க. ஒளிவுமறைவில்லாமல் பேசக்கூடிய ஒரு இயக்கம் தான். அதனால அந்த சம்பவம் திமுகவுக்கு சம்பந்தமில்லை. இங்க நாங்க வந்து ஆதாரத்தோட சொல்லியிருக்கிறோம், இவங்களை நிர்வாகினு சொல்லியிருக்கோம்.

செய்தியாளரை பார்த்தால் பயமா CM!

சார், இதுபோல சமூகத் தீமைகளில் ஈடுபடுவாங்களா? இதற்கு முன்பாக இந்த செயலில் ஈடுபட்டுட்டு இருந்துட்டு டிவி-ல (TVK) இணைஞ் சிட்டாங்கன்னு நினைக்கிறீங்களா? இல்ல, பொதுவாக டிவி-ல இணைந்து எடுத்ததுக்கு அப்புறம் அரசு அதிகாரம் கிடைச்சிருச்சு, இப்படி மாறிட்டாங்கன்னு நினைக்கிறீங்களா?

இல்ல, அதாவது இந்த பார்ட்டியே வந்து, இட்ஸ் நாட்... அதாவது ஒரு அரசியல் அமைப்பாவே இது வரல சார் முதல்ல. தவெக... நான் ஏற்கனவே கூட ஒரு செய்தியாளர் கூட்டத்தில் கேட்டீங்க, "இவங்க அரசியல் பண்றாங்களா?"ன்னு கேட்டீங்க. இவங்க அரசியலே பண்ணல, அது மாதிரிதான் இது. ஒரு அரசியல் இயக்கமே இல்லை, இது ஒரு ரசிகர் கூட்டம், ரசிகர் கூட்டம், தேர்தல் நின்னுச்சு, மேண்டேட் (Mandate) வாங்கிருச்சு, ரெகக்னிஷன் (Recognition) எலக்ஷன் கமிஷன்ல (Election Commission) வாங்கிருச்சு, டக்குன்னு ஒரு கட்சியா வந்திருக்கு.

இன்ன வரைக்கும் இது ஒரு அரசியல் இயக்கமா உருவாகல. இது அரசியல் இயக்கமா உருவாகியிருந்து, கொள்கையின்பால் உருவாக்கப்பட்டு, ஈர்க்கப்பட்டு வந்திருந்தா, அதுல கரெக்டா வருவாங்க. இது பூரா அக்யூஸ்டு! (Accused) அதாவது பிஜேபி கட்சியில பால் கனகராஜ் அண்ணன் ஜாயின் பண்ண பிறகு பார்த்தீங்கன்னா, ஃபுல்லா பிஜேபில எல்லா நர்காடிக் அக்யூஸ்ட் (Narcotics accused) எல்லாருமே வந்து ஜாயின் பண்ணாங்க. இது பிஜேபி பேட்டர்ன் (Pattern) சார்!


இது பிஜேபில எப்படி எல்லா குற்றவாளியும் வந்து தஞ்சம் புகுவதற்காக வந்து பிஜேபில ஜாயின் பண்ணாங்களோ, அதே மாதிரிதான் டிவிகே! பிஜேபி அண்ட் டிவிகே வேற வேற இல்ல. அவர் சொன்னதேதான், பிஜேபியுடைய பிரான்ச் டிவிகேன்னு வாயில்லாம அவர் சொன்னாரு. உள்ளத்தில் இருக்கக்கூடிய எண்ணங்கள் எல்லாம் வெளியில வரும். எவ்வளவு நாளும் பொய் மறைக்க முடியாதுன்றதுக்கு விஜய் அன்னைக்கு நின்னு பேசினார் பார்த்தீங்களா, அதுதான் சாட்சி! சத்தியத்திற்கு முன்னாடி, தர்மத்துக்கு முன்னாடி, நியாயத்துக்கு முன்னாடி யாரும் ஏமாற்ற முடியாதுன்றதுனாலதான், விஜய் தன் மனசுக்குள்ள இருக்கிறதை பிஜேபியுடைய பிரான்ச் டிவிகேன்னு சொன்னாரு. அதனால எல்லா கல்பிட்ஸும் (Culprits) இந்த கட்சிக்குள்ள இருக்காங்க.

இவ்வாறு கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

வளைகுடா நாடான பக்ரைன் நாட்டில்

தி.மு.க. அயலக தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் (NRTIA) சார்பில் முப்பெரும் விழா!

முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!



பக்ரைன், அக். 21- வளைகுடா நாடான பக்ரைன் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அயலக தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் (NRTIA) சார்பில் முப்பெரும் விழா 16.10.2026 வெள்ளிக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

மேனாள் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை மற்றும் விளையாட்டு மற்றும் சுற்று சூழல் துறை அமைச்சரும் ஆலங்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான சிவ.வீ.மெய்யநாதன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு விழா பேருரை நிகழ்த்தினார். NRTIA பகரைன் பொறுப்பாளர் முகமது ஹுசைன் மாலிம் முன்னிலையில், துணை அமைப்பாளர் எருச்சி ரவிச்சந்திரன் தலைமையில் விழா சிறப்பாக நடைபெற்றது. துணை அமைப்பாளர் சுல்தான் இப்ராகீம் விழா ஏற்பாடுகளை செய்திருந்தார்.

ஏராளமானோர் கலந்து கொண்ட விழாவில் பெரியார், அண்ணா, கலைஞர் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

சுற்று சூழல் ஆர்வலரான சிவ.வீ.மெய்யநாதன் வருகை நினைவாக மர கன்று நடப்பட்டது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கப் பட்டது. நிகழ்வில் கணேஷ் ரெஜீனா அபு, ஆசிரியை ஆயிஷா, சரண்யா, செல்வி நஜ்வா ஆகிய ஐந்து இளம் மகளிர் திராவிட மாடல் ஆட்சியையும் தமிழகத்தின் இன்றைய நிலையையும் ஒப்பிட்டு சிறப்பான வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் பேசிய முன்னாள் அமைச்சரும், ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினருமான சிவ.வீ மெய்யநாதன் கடந்த திராவிட மாடல் ஆட்சியில், தி.மு.க. செய்த சாதனைகளை பட்டியலிட்டு பேசினார். தலைநகர் சென்னையில் திமுக அரசுமாசுக் கட்டுப்பாட்டை குறைத்தது பற்றியும்

கிராமப் புறங்களில் குறுங்காடுகள் அமைத்து லட்சக்கணக்கில் மரங்கன்றுகள் நடப்பட்டதையும் குறிப்பிட்டு பேசினார்.

பரந்தூரில் அமைய விருந்த விமான நிலையத் திட்டம் கைவிடப் பட்டதும் அதனால் எதிர்காலத்தில் தமிழ்நாடு எவ்வளவு பின்னடவைச் சந்திக்கும் என்று கவலையுடன் சுட்டிக் காட்டினார்.

கல்விக்காக திமுக செய்த திட்டம், நான் முதல்வன் திட்டத்தால் மாணவர்கள் பெற்ற பலன்களையும், பெண் களை சுயமரியாதையுடன் வாழ மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் ஆகியவற்றால் தமிழ் நாட்டில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றியும்,

தி.மு.க. ஆட்சியில், தொழில் துறையில் தமிழ் நாடு அடைந்த முன்னேற்றம் பற்றி பேசினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் மற்றும் ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் சிவ.வீ. மெய்ய நாதன் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2026 முப்பெரும் விழா தலைமை விருது திருச்சி ரவிச்சந்திரனுக்கும், பெரியார் விருது துணை அமைப்பாளர் கருணாநிதி சண்முகத்துக்கும், அண்ணா விருது துணை அமைப்பாளர் கபீர் அகமதுக்கும்,

தலைவர் கலைஞர் விருது ஆலோசனைக் குழு உறுப்பினர் நாஞ்சில் பஷீருக்கும், பேராசிரியர் க. அன்பழகன் விருது அவைத் தலைவர் திருச்சி சு.முபாரக்குக்கும்,

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் விருது துணைத் தலைவர் குடந்தை ஆரிப்க்கும்,

பாவேந்தர் விருது ஆலோசனைக் குழு துணைத் தலைவர் தக்கலை சாம்க்கும்,

முரசொலி செல்வம் அவர்களின் விருது செயற்குழு உறுப்பினர் மு.சிதம்பரத்திற்கும் வழங்கப் பட்டது.

நானூருக்கும் மேற்பட்ட திமுக தொண்டர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹாஜா தொகுத்து வழங்க, மக்கள் தொடர்புச் செயலாளர் ஸ்ரீதர் சிவா வரவேற்புரையாற்ற, பொதுச் செயலாளர் மேலப்பூந்தை இஸ்மாயில் நன்றியுரை கூறினார்.

விழா முடிவில் பல இளைஞர்கள் மேனாள் அமைச்சர் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

தலைமைக் கழகத்தில் – புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட

ஊராட்சி ஒன்றிய கிராம நிர்வாகிகள் பட்டியலை ஒப்படைப்போம்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை, அக்.21- புதுக்கோட்டை வடக்கு, மாவட்ட கழக செயற்குழு கூட்டம் 19.10.2026 திங்கள் கிழமை மதியம் 12 மணிய எவில் புதுக்கோட்டை மாவட்ட திமுக அலுவலகம் பெரியண்ணன் மாளிகை கீரை தமிழ்ச்செல்வன் அவைக் கூடத்தில் தலைமை கழக பிரதிநிதிகள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், கழக தகவல் தொழில் நுட்ப அணி இணைச் செயலாளர் மதுரை எஸ்.பாலா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே. கே. செல்லப்பாண்டியன் வரவேற்புரையாற்றினார். புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரையாற்றினார்.

முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. மேயர் திலகவதி செந்தில், த.சந்திரசேகரன், சு.ப.சரவணன், செ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், அரு. வீரமணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன்,

பெ.ராஜேஸ்வரி, எம். லியாகத்அலி, சு.சண்முகம், வே.ராஜேஸ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வுகளில் கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், தென்னலூர் எம்.பழனியப்பன், எம்.பரமசிவம், என். சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாசலம், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், ஆர்.ஆர். சாமிநாதன், எம்.கோவிந்தராஜ், வை. விஜயக்குமார், இராசு.சந்தோஷ், எம்.செந்தில்குமார், ஆர்.செல்வத்துரை, அ.ரெத்தினம், செந்தாமரை பாலு, வி.ஜி.ஆர். மணிவண்ணன், வி.என். எம்.பாலு, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் சி.குறிஞ்சிவாணன், சி.அரங்கநாயகம், புத்தாம்பூர் எம்.சுப்பையா, கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷித், செ.கணேஷ், மாலா ராஜேந்திர துரை, இராம.செல்வராஜ், ஜெ.அஸ்ரப் அலி, ஆ. ராஜேந்திர சோழன், வெற்றிச் செல்வன், மா.மணிவேலன், வடவாளம் க.செ. மணிமாறன், செ.ரமேஷ், சொ.தமிழினியன், ராயல் சபா, ஞானசேகரன், தேங்கனிப்பட்டி ராஜா, டி.தயாளன், ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நடந்து முடிந்த மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற தேர்தலில் தனித்து நின்றாலும் திராவிட முன்னேற்ற கழகம் மக்கள் செல்வாக்கை இழக்கவில்லை என்பதை தன் செயல்திறன் மூலம் நிரூபித்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் அவருக்கு துணை நின்ற இயக்கம் காக்க போராடிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மாவட்டச் செயற்குழு தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறது.

தொடர்ந்து வரும் இடைத்தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்து அதன்மூலம் தமிழ்நாட்டு மக்களின் மனதில் திராவிட முன்னேற்ற கழகம் நிலைத்து நிற்கிறது என்பதை நிரூபிக்க சபதம் ஏற்க மாவட்டச் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றுகிறது.

அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்கள் பட்டியலை புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தேர்தல் பிரதிநிதிகளான மாநில விவசாய அணி செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.எஸ்.விஜயன், மாநில தகவல் தொழில் நுட்ப அணி இணைச் செயலாளர் மதுரை பாலா ஆகியோர் மூலம் மாவட்ட கழகத்தின் மூலம் தலைமை கழகத்தில் 2 நாட்களுக்குள் ஒப்படைப்பது என முடிவு செய்யப்படுகிறது.

கழகத்தலைவர் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், போராட்டங்களுக்கும் முழு ஒத்துழைப்பு தந்து எழுச்சியோடும் சிறப்போடும் அவற்றை நடத்திட தீர்மானிக்கப்படுகிறது.